Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR
Case No.CC.NO. **166/2019**
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.7 Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. மணி | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. சேட்டு | **கிராமம்/ ஊர்** | வாணியம்பாடி |
| **வயது** | 59 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு– ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1-4 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 17th day of March 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.-**

1. நான் தற்போது குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் பணியில் இருந்த சமயம் கடந்த 03.02.2019 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 விசாரித்து காலை 07.00 மணியளவில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி காலை 08.00 மணிக்கு நிலைய குற்ற எண். 58/2019 இதச பிரிவுகள் 294(பி), 324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 03.02.2019 காலை 09.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகேஷ் மற்றும் சுபாஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு

பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ.6,7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** அதன் தொடர்ச்சியாக மேற்படி சாட்சிகள் முன்னிலையில் புகார்தாரரின் வீட்டிடம் இருந்து இரண்டு மரக்கட்டைகளை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். ( **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கு சொத்தினை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**அந்த படிவம் – 91 அ.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அசா1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சிவக்குமாரை விசாரணை செய்து காயசான்றும் வாக்குமூலமும் பெற்றேன். மருத்துவர், அசா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டபிரவுகளை இதச பிரிவுகள் 294(பி), 324 லிருந்து இதச பிரிவுகள் 294(பி), 324, 326 ஆக பிரிவு மாற்றுதல் அறிக்கை மூலம் பிரிவு மாறுதல் செய்தேன். **( அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 326 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரரிடம் 161 வாக்குமூலம் பதிவு செய்ததும், புகார் வாக்குமூலம் பதிவு செய்தததும் நான் என்றால் சரிதான். வழக்கின் உத்தரவு குறித்து நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வலி அதிகமாக இருந்ததால் என் அண்ணன் மகன் சென்னப்பன் திருப்பத்தூர் மருத்துவமனையில் சேர்த்தால் என்று 161 வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலும், 161 வாக்குமூலத்திலும், மருத்துவரிடமும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் தாக்கியதாக அ.சா1 கூறியுள்ளார் என்றால் சரிதான். சம்பவயிடத்தை எனக்கு அடையாளம் காட்டினார். சென்னப்பன் தான் வழக்கு சொத்தினை என்னிடம் ஆஜர் செய்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து ரீப்பர் என்றால் சரியல்ல, மரக்கட்டை தான் கைப்பற்றப்பட்டது. வழக்கின் பிரிவு மாற்றம் செய்தபின் புதியதாக சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிட சாட்சிகளை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில், 3,4 எதிரிகள் பற்றி முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில்

நுண்கதிர் படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், அ.சா.1 கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்தை பெற்று, இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து, தயாரித்து, எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness          Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |